**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. II**
**DINDIGUL.**

**C.C.No.269/2021**
**Prosecution Witness : 2**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : சந்தனகுமார் | **Caste** | : |
| **Father's Name** | : காளிமுத்து | **Calling** | : டிராக்டர் டிரைவர் |
| **Village** | : பூதிபுரம் | **Religion** | : |
| **Taluk** | : திண்டுக்கல் | **Age** | : 27/2026 |
| | | **Dated** | : 16.06.2026 |

**16.06.2026**
இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி–5 **திரு. சந்தனகுமார்** ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு **அ.சா. 2** ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**1 முதல் 3 எதிரிகள் ஆஜர் இல்லை . U/s.355 of petition filed and allowed.**

**<u>முதல் விசாரணை</u>**

நான் பூதிபுரத்தில் குடியிருந்து கொண்டு டிராக்டர் டிரைவர் வேலை செய்து வருகிறேன். நான் கடந்த 2020 ஆம் வருடம் திண்டுக்கல் தாடிகொம்பு ரோட்டில் உள்ள ரிலையன்ஸ் பெட்ரோல் பங்கில் சூப்பர் வைசராக வேலை செய்து வந்தேன். தேதி மாதம் நினைவில் இல்லை 2020 ஆம் வருடம் ஒரு நாள் காலை பெட்ரோல் பங்க் வேலைக்கு வந்தபோது முதல் நாள் இரவு நடந்த கொள்ளை சம்பந்தமாக போலிசார் படம் வரைந்து சாட்சியாக இருக்கும்படி கையொப்பம் பெற்றார்கள். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள கையொப்பம் என்னுடையது அல்ல. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>1 முதல் 3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

பார்வை மகஜரில் சுப்பையா, மகேந்திரன் ஆகியோரிடம் கையொப்பம் பெற்றார்கள் என்றால் சரிதான். என்னை பார்வை மகஜர் சாட்சியாக பார்வை மகஜரில் காட்டவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கு சம்பந்தமாக என்னிடம் போலிசார் ஏதும் கையொப்பம் வாங்கவில்லை என்றால் சரிதான்.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

DINESH KUMAR C
Digitally signed by DINESH KUMAR C
Date: 2026.06.16 14:06:56 +0530

Judicial Magistrate No.II
Dindigul.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. II**
**DINDIGUL.**

**C.C.No.269/2021**
**Prosecution Witness : 1**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : அம்பேத்ராஜா | **Caste** | : |
| **Father's Name** | : சீனிகோபால் | **Calling** | : டிரைவர் |
| **Village** | : அழகுசமுத்திரப்பட்டி | **Religion** | : |
| **Taluk** | : திண்டுக்கல் | **Age** | : 33/2026 |
| | | **Dated** | : 16.06.2026 |

**16.06.2026**
இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி–4 **திரு. அம்பேத்ராஜா** ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு **அ.சா. 1** ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**1 முதல் 3 எதிரிகள் ஆஜர் இல்லை . U/s.355 of petition filed and allowed.**

**முதல் விசாரணை**

நான் அழகுசமுத்திரப்பட்டியில் குடியிருந்து கொண்டு டிரைவராக வேலை செய்து வருகிறேன். நான் கடந்த 2020 ஆம் வருடம் திணடுக்கல் தாடிகொம்பு ரோட்டில் உள்ள ரிலையன்ஸ் பெட்ரோல் பங்கில் சூப்பர் வைசராக வேலை செய்து வந்தேன். தேதி மாதம் நினைவில் இல்லை 2020 ஆம் வருடம் ஒரு நாள் காலை பெட்ரோல் பங்க் வேலைக்கு வந்தபோது வழக்கமாக எங்கள் பெட்ரோல் பங்கில் லாரிகள் இரவு நேரங்களில் நிறுத்தி அதில் ஓட்டுநராக வேலை செய்து வரும் நபர்கள் இரவில் தங்கி குளித்து செல்வது வழக்கம்.

அதேபோல ஈரோட்டை சேர்ந்த அருள்குமார் என்பவர் இரவு லாரியை நிறுத்திவிட்டு இயற்கை உபாதைக்காக வெளியில் சென்றவரை 3 நபர்கள் அடித்து அவரிடம் இருந்த ரூ.10,000 பணத்தையும், 1/2 பவுன் தங்க காசயும் பறித்து சென்றதாக காலையில் என்னிடம் அருகில் இருந்தவர்கள் தெரிவித்தார்க்ள். சம்பவம் குறித்து போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**1 முதல் 3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

இந்த வழக்கு சம்பந்தமாக நேரடியாக எனக்கு தெரியாது என்றால் சரிதான். சம்பவம் நடைபெற்ற அன்று நான் வேலைக்கு செல்லவில்லை என்றால் சரிதான். நான் பணியாற்றும் ரிலையன்ஸ் பெட்ரோல் பங்கில் கழிப்பறை வசதி உள்ளது என்றால் சரிதான். நான் பணியாற்றும் பெட்ரோல் பங்கில் பொறுத்தப்பட்டுள்ள CCTV cameraவில் உள்ள பதிவுகளை கைப்பற்றினார்களா என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொன்னது போல் எந்த சம்பவமும் கேள்விபடவில்லை என்றாலும், போலீசார் கேட்டுக்கொண்டதன்பேரில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை**

இல்லை

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

DINESH KUMAR C
Digitally signed by DINESH KUMAR C
Date: 2026.06.16 14:07:02 +0530

Judicial Magistrate No.II
Dindigul.